**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.40
https://ngmtamil.in/

# பண்டைத் தமிழரின் நம்பிக்கைகளில் கண்ணிமை துடித்தல் (சங்க பாடல் முதல் திரைப்பாடல் வரை)

**முனைவர் சு. சரஸ்வதி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அறிவியல் மற்றும் கலையியல் புலம்,
SRMIST, காட்டாங்குளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம்,
தமிழ்நாடு. கைப்பேசி: 9442399476, Mail Id:saraselam@gmail.com
ORCiD: https://orcid.org/0000-0002-5949-4485

**ஆய்வுச்சுருக்கம்:**

சங்க காலத்தில், இயற்கையில் நிகழும் மாற்றங்கள், பறவைகள் மற்றும் விலங்குகளின் செயல்பாடுகளை எதிர்கால நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி அறியும் வழக்கம் மக்களிடையே பரவலாக இருந்தது. நன்மை அல்லது தீமை விளங்குவதை உணர்த்தும் இத்தகைய அறிகுறிகள் 'நிமித்தம்' (சகுனம்) என்று அழைக்கப்பட்டன. தமிழர் நம்பிக்கைகளில் ஒன்று கண்ணிமை துடித்தல். பெண்களின் இடது கண் துடித்தால் நன்மை ஏற்படும் என்றும் வலது கண் துடித்தால் தீமை ஏற்படும் என்றும் நம்பினர். தமிழில் கண்ணிமை துடித்தல் (சகுனம்/நிமித்தம்) சார்ந்த தகவல்கள் சங்க இலக்கியம், காப்பியங்கள், மற்றும் திரையிசைப் பாடல்களில் பரவலாகப் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியத்தில் நிமித்தம் என்ற சொல்லாடலைக் காணமுடிகிறது. கலித்தொகை மற்றும் ஐங்குறுநூற்றில் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையும் கம்பராமாயணத்தில் இராமனைப் பிரிந்த சீதையின் நிலையும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி மற்றும் மாதவியின் நிலையும் மற்றும் திரைப்படங்களில் இடம்பெற்றுள்ள கண்ணிமை துடித்தல் சார்ந்த பாடல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** தொல்காப்பியம், சங்க இலக்கியம், சகுனம், நிமித்தம், அறிகுறிகள், கண்ணிமை துடித்தல்,

## முன்னுரை

சங்க இலக்கியம் என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்களின் வாழ்வியலைக் காட்டும் காலக்கண்ணாடி ஆகும். பண்டைய காலம் முதல் இன்றுவரை மக்கள்

பல்வேறு வகையான நம்பிக்கைகளைக் கொண்டிருந்தனர். இன்றைய விஞ்ஞானக் காலத்திலும் தமிழர்கள் தம் முன்னோர் பின்பற்றிய நம்பிக்கைகளை மரபு வழியாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். இயற்கையைப் போற்றி வழிபடுவது அந்த நம்பிக்கையின் ஆரம்பமே. தொடர்ந்து மனித மனம் நம்புபவையே காலப்போக்கில் நம்பிக்கைகளாகவும் சடங்குகளாகவும் மாறிவிடுகின்றன. இந்நம்பிக்கைகளில் கண்ணிமை துடித்தல் குறித்த செய்திகள் சங்ககாலம் இலக்கியங்களில் தொடங்கி இன்று திரைப்படம் வரையிலும் இடம்பெற்றுள்ள பாடல்களைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நம்பிக்கை**

நம்பிக்கை என்பது வாழ்க்கையில் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. நம்பிக்கை என்பதற்கு, “விசுவாசம், ஆனை, உண்மை” என்றும் “சத்தியம், நிசம், உறுதிப்பாடு” என்றும் மதுரைத் தமிழ்ப் பேரகராதி பல்வேறு பொருள்களைத் தெரிவிக்கின்றது. நம்பிக்கைகளில் முக்கியமானது நிமித்தம் (சகுனம்) பார்த்தல் என்பதாகும். நாம் செய்யும் செயலால் வெற்றி ஏற்பட்டால் நன்மை என்றும் தோல்வி ஏற்பட்டால் தீமை என்றும் நம்பினர்.

“நன்மையின்பால் உள்ள ஆர்வமும் தீமையின்பால் உள்ள அச்சமும் பெரும்பான்மையான நம்பிக்கைகட்கு அடிப்படை எனலாம்.” (டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.245.) என்று டாக்டர் அ. தட்சிணாமூர்த்தி கூறுகிறார்.

”வாழ்வில் பின் நிகழ்விற்கும் நன்மை தீமைகளை சில குறியீடுகளின் வாயிலாக முன்னுணர்த்துவது நிமித்தம்?” (கா. காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்,ப.109.) என்று கா. காந்தி கூறுகிறார்.

**நிமித்தம் அல்லது சகுனம் என்ற சொல்**

நிமித்தம் அல்லது சகுனம் என்பது மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகும். நிமித்தம் என்பது வாழ்வில் பின் நிகழவிருக்கும் நன்மை தீமைகளைச் சில குறியீடுகளின் வாயிலாக உணர்த்துவதாகும். இதனை இன்று 'சகுனம்' என அழைக்கின்றனர். பழங்காலத் தமிழர்கள் இதனைப் புள் நிமித்தம் என இரு சொற்களால் சுட்டியுள்ளனர். தொல்காப்பியத்தில்,

"மன்னும் நிமித்தம் மொழிப்பொருள் தெய்வம்" (தொல்.பொருள். 39.1-4)

என்று குறிப்பிடப்படுகிறது. வீட்டில் இருந்து புறப்படும் முன் நன்னிமித்தம் பார்த்து அவர்கள் புறப்பட்டனர். பறவைச் சகுணங்களாலும் நிமித்தங்கள் தீர்மானிக்கப்பட்டன.

"புள்ளும் பொழுதும் பழித்தல் அல்லதை
உள்ளிச் சென்றோர் பழியலர்" (புறம். 204:10-11)

வள்ளலிடம் பரிசில் கிடைக்கவில்லை என்றால் வள்ளலைப் பழிக்காமல் தாம் புறப்பட்ட நேரம் நல்ல நேரமாக இல்லை என்று வருந்தினர். பறவை செயல்கள் மூலமாகவும் நிமித்தம் பார்க்கப்பட்டது. அது

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

புள் நிமித்தம் எனப்பட்டது. நாளினாலும் புள்ளினாலும் நிமித்தம் பார்க்கப்பட்டது. இந்நம்பிக்கைகள் மக்களின் வாழ்வியலோடு ஒன்றி விட்ட நிலையினை இன்றும் நம்மால் அறியமுடிகிறது.

**சங்க இலக்கியங்களில் நிமித்தங்கள்**

இலக்கியங்களில் பெரும்பாலும் கனவுகளில் இயற்கைக்கு முரண்பாடான அச்சந்தரக்கூடிய சில செயல் நிகழ்வுகளிலும், இயற்கைத் தன்மைக்கு மாறுபட்ட நிகழ்ச்சி மற்றும் சூழ்நிலை வயப்பட்ட பொருட்களின் செயல்களிலும் இயற்கையையொட்டி நடைபெறும் நிகழ்ச்சிகள் மூலமாகவும் நிமித்தங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள கண் இமைத்தல் (சகுனம்/நிமித்தம்) குறித்த முக்கிய பாடல்களைப் பார்ப்போம்.

**மாந்தர் உறுப்புகளில் நம்பிக்கை**

நாள், கோள், புள், விலங்குகள் இவற்றின் அடிப்படையில் மட்டுமே நம்பிக்கைகள் அமைந்தன என முடிவு கொள்ளுதற்கு இல்லை.

மாந்தர்களின் வருகை, செல்கை, உரையாடல் போன்ற செயல்களும் மாந்த உறுப்புகளின் செயல்களும் குறிகளாக நிமித்தங்களாகக் கொள்ளப்பட்டன. மாந்தர் எதிர்ப்படுதல், கண்ணிமை துடித்தல், தும்முதல், வளைசெறிதல் எனும் செயல்களும் நன்மை தருவனவும் உள்ளன; தீமை தருவனவும் உள்ளன என நம்பினர். மகளிர்க்குக் கண், புருவம், நெற்றி, முதலியன இடம் துடித்தல் நன்மையை உணர்த்தும் நன்னிமித்தம் ஆகும் என்பதனை இலக்கியங்கள் சுட்டுகின்றன. கண் இமைத்தல் என்பது இயல்பு நிகழ்ச்சி. ஆனால், கண்ணிமை துடித்தல் எப்போதேனும் நிகழ்வது. பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்மையைத் தரும்; வலக்கண் துடித்தல் தீமையைத் தரும் என்று மக்கள் நம்பினர் என்பதை இலக்கியங்கள் குறிக்கின்றன.

**இடது கண் துடித்தல்**

பெண்களுக்கு இடது கண், இடது புருவம், அல்லது இடது தோள் துடிப்பது நல்ல சகுனம் என்று நம்பப்பட்டது. கலித்தொகை மற்றும் பிற சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட இலக்கிய ஆய்வுகள், தலைவனைப் பிரிந்து வாடும் தலைவிக்கு இடது கண் துடித்தால் தலைவன் வருவான் அல்லது நற்செய்தி கிடைக்கும் என்பதற்கான அறிகுறியாகப் புலவர் பாடியுள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

கலித்தொகையில் பிரிவுத் துன்பத்தில் உழலும் தலைவிக்கு ஆறுதல் கூறும் தோழி, "இடக்கண் துடிக்கின்றது. தலைவன் வருதல் உறுதி" என்று நிமித்தங்கூறி ஆற்றுவிக்கின்றமையை,

"இணை நலமுடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன்
நல்லெழி லுண்கணு மாடு மாலிடனே" (கலித்.77)

எனும் பாடல் வரிகள் நன்மை உணர்த்தியச் செய்தியைக் காட்டுகிறது.

ஐங்குறுநூற்றில் தலைவன் பிரிவை தாங்கமுடியாமல் தலைவி வருந்துகின்றாள். அப்போது தோழி தனக்கு நன்னிமித்தம் தோன்றியதால் தலைவன் விரைந்து வருவான் எனத் தலைமகளை ஆற்றுப்படுத்தினாள்.

"நுண்ஏர் புருவத்த கண்ணும் ஆடும்
மயிர்வார் முன்கை வளையும் செறூஉம்" (ஐங். 218)

முன்கை வளையல்கள், உடல் பருத்தலால் இருக்கமாகிறது என்பதை ஓர் அறிகுறியாகவும், இடதுகண் துடிப்பதை ஓர் அறிகுறியாகவும் கொண்டு நிமித்தமாக நம்பினர்.

இராமாயணத்திலும் காணப்போவது நல்லதா, கெட்டதா எனத் துடிக்கும் கண்களைப் பற்றி சில குறிப்புகள் உண்டு. ஆண்களுக்கு வலதுபுறமும் பெண்களுக்கு இடது புறமும் கண், புருவம், தோள் முதலியன துடித்தல் நல்ல சகுனமாகும் என்பதை

“பொலந் துடிக்கு அமை மருங்குல்போல், கண்களும், புருவமும், பொன்-தோளும்,
வலம் துடித்தன; மாதிரம் துடித்தன; தடித்து இன்றி, நெடு வானம்
கலந்து இடித்தன; வெடித்தன, பூரண மங்கல கலசங்கள்.”

(கம்ப,சுந்தரகாண்டம்.202:2-4)

என்னும் அடிகளின் மூலம் குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும் அசோகவனத்தில் வருத்தத்துடன் இருந்த சீதையைப் பார்த்து இராவணன் பணியுமாறு மிரட்டிவிட்டு, "இவளை எப்படியாவது என் வசப்படுத்து" என்று திரிசடையிடம் ஆணையிட்டுச் செல்கிறான். அப்போது சீதைக்கு இடது கண் துடிக்கிறது. சீதை மனம் நடுங்கி, உடல் தளர்ந்து திரிசடையிடம் தன் வருத்தத்தைக் கூறுகிறாள்.

"முனியொடு மிதிலையில் முதல்வன் முந்துநாள்
துனிஅறு புருவமும் தோளும் நாட்டமும்
இனியன துடித்தன, ஈண்டும் ஆண்டு என
நனி துடிக்கின்றன, ஆய்ந்து சொல்வாய்" (பா.எ.5101)

என்கிறாள். அதாவது, முதன்முதலாக இராமன் விசுவாமித்ர முனிவருடன் மிதிலைக்கு என்னைக் காணவருகையில் என் இடதுகண்ணும் தோளும் புருவமும் துடித்தன. அதேபோல தம்பி பரதனுக்கு நாட்டை அளித்துவிட்டு வனம்புகுந்த நாளிலும், இராவணன் என்னை சிறைகொண்ட நொடியிலும் என் வலதுகண், தோள், புருவம் ஆகியன துடித்தன. ஆனால், தற்போதோ இடது கண் துடிக்கிறது. இடதுகண் துடித்தால் நன்மையென்று சொல்வார்களே அப்படி ஏதேனும் என் வாழ்வில் நடக்க இருக்கிறதா எனத் திரிசடையிடம் சீதை கேட்பதாகக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரத்தில் (இந்திரவிழவு ஊர் எடுத்த காதை) பாடல் வரிகள் அமைந்துள்ளன.கோவலனைப் பிரிந்த கண்ணகிக்கும், அவனுடன் கூடி இன்புற்றிருந்த மாதவிக்கும் கண் துடித்ததை ஆசிரியர்,

"கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினுந் துடித்தன"
(இந்திர விழா ஊர் எடுத்த காதை. 237-239)

எனும் வரிகளில் இரண்டுபேரின் மனவோட்டத்தையும் ஒரே பாடலில் தெரிவித்திருக்கிறார். இதன் மூலம் கண்ணகிக்கு இடக்கண்ணும், மாதவிக்கு வலக்கண்ணும் துடித்ததாகக் கூறப்படுகிறது. அக்கால நம்பிக்கையின்படி இடக்கண் துடித்தல் நல்ல சகுனமாகவும் (கண்ணகிக்கு நல்லது நடக்கும்), வலக்கண் துடித்தல் கெட்ட சகுனமாகவும் (மாதவிக்கு வரவிருக்கும் பிரிவு) சித்தரிக்கப்பட்டுள்ளது. கண்ணகியின் இடப்புற கண் துடித்ததால் வெகுவிரையில் மாதவியிடமிருந்து கோவலன் பிரிந்து, கண்ணகியைச் சேரவிருப்பதாக இளங்கோ சிந்தித்திருக்கிறார்.

திரைப்பாடல்களிலும் எளிய மக்களின் நம்பிக்கைகள் இடம்பெற்றுள்ளன. புராண, இதிகாசக் கருத்துகளையும், இலக்கியத்தின் நுட்பமான பகுதிகளையும் எளிய மொழியில் வெளிப்படுத்திய எத்தனையோ பாடல்களையும் பாடலாசிரியர்கள் எழுதியுள்ளனர். எம்.ஜி.ஆர். நடித்த `குமரிக்கோட்டம்' திரைப்படத்தில் வெளிவந்த

`நாம் ஒருவரை ஒருவர் சந்திப்போமெனக்
காதல் தேவதை சொன்னாள்'
என் இடது கண்ணும் துடித்தது
உனைக் கண்டேன் இந்நாள் / பொன்னாள்' (குமரிக்கோட்டம்)

என்னும் பாடலில் இடது கண் துடிப்பதைக் காதல் தேவதையின் வாக்குடன் தொடர்புபடுத்தி, தலைவனைக் காணப்போகும் பொன்னான நாளாக இந்தப் பாடலில் வாலி அவர்கள் மிக அழகாக எழுதியிருப்பார். வெறும் திரைப்பாடல்தானே எனக் கடந்துவிடாமல் கவனித்துக் கேட்கும்போதுதான் அவ்வரிகளின் நுட்பத்தை உணரமுடியும். `என் இடதுகண்ணும் துடித்தது' என ஜெயலலிதா பாடுவார். அதே வரியை எம்.ஜி.ஆர்., ` என் வலது கண்ணும் துடித்தது' என மாற்றி உச்சரிப்பார். இடது வலதாகவும், வலது இடதாகவும் ஏன் மாற்றிப்பாடப்பட்டிருக்கின்றன என்பதற்குள் இலக்கிய அழகியல் ஒளிந்திருக்கிறது.

இப்பாடலின் இன்னொரு சாயலை ஆர்.வி.உதயக்குமார் தன்னுடைய சின்னக்கவுண்டர் திரைப்படத்தில் எழுதியிருக்கிறார். ஆர்.வி.உதயக்குமார் எழுதிய பல பாடல்கள் அனைவராலும் ரசிக்கப்பட்டவை. அவர், ஆகச்சிறந்த வெற்றிப் படங்களையும் பாடல்களையும் தமிழ்த்

திரையுலகிற்குத் தந்திருக்கிறார். `கூண்டுக்குள்ள என்ன வச்சு' என ஆரம்பமாகும் பாடலில் சிலப்பதிகாரமும் குமரிக்கோட்டமும் இணைந்து வந்திருப்பதை ரசிக்கலாம். கூண்டுக்குள்ள என்ன வச்சி என்னும் பாடலில்,

`கண்ணு வலதுகண்ணு தானா துடிச்சதுன்னா
ஏதோ நடக்குமின்னு பேச்சு
மானம் குறையுமின்னு மாசு படியுமின்னு
வீணா கதை முடிஞ்சு போச்சு
ஈசான மூலையில லேசான பல்லிச் சத்தம்
மாமன் பேரைச் சொல்லி பேசுது ' (சின்னக்கவுண்டர்)

'கதையின் பின்னணியிலிருந்து இவ்வரிகளை யோசித்தால் சூழலுக்கு எழுதப்பட்டதாகத் தோன்றும். சூழலுக்கு எழுதினாலும் அச்சூழலைச் சொல்லுவதற்கு அவர் கையாண்டுள்ள உத்தி, அபாரமானது. சிலப்பதிகாரம் வாசிக்காத ஒருவருக்குக் குமரிக்கோட்டம் தெரியலாம். குமரிக்கோட்டம் பார்க்காத மற்றொருவருக்கு ஆர்.வி. உதயக்குமாரின் சின்னக்கவுண்டர் பிடிபடலாம். காலந்தோறும் கைமாறி கைமாறி வரக்கூடிய இவ்வகையான உத்திமுறைகளே திரைப்பாடல்களை உயிர்ப்புடன் வைத்திருக்கின்றன' என்று இலக்கியமும் இசையும் என்ற கட்டுரையில் கவிஞர் யுகபாரதி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

பண்டைத் தமிழக மக்கள் பின்னாளில் நிகழ்வுள்ள நன்மையோ தீமையோ எதுவானாலும் அதை முன்கூட்டியே அனுமானிப்பதை சகுனமென்றும் நிமித்தமென்றும் சொல்வர். அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளையும் இலக்கியங்களின் வழியே நாம் அறியலாம். சங்க கால இலக்கியங்கள், சிலப்பதிகாரம், இராமாயணம் ஆகிய இலக்கியங்கள் மட்டுமின்றி திரைப்பாடல்களின் வழியாகவும் தமிழர்களின் நிமித்தம் குறித்த நம்பிக்கைகளை அறியலாம். இன்றைய அறிவியல் உலகில் பழந்தமிழ் மக்களின் நம்பிக்கைகள் அறிவுக்குப் பொருத்தமில்லாததாகத் தோன்றலாம். எனினும் ஒரு நாட்டின் வரலாற்றில் இத்தகைய நம்பிக்கைகளில் பல அவர்களின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்திருக்கிறது என்பதைத் தெள்ளத்தெளிவாகக் காணமுடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

[1.] தொல்காப்பியம் சொல்லதிகாரம், பொருளதிகார மூலம், இளம்பூரணர் உரை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

[2.] துரைசாமி பிள்ளை, ஔவை, சு. (உரை), ஐங்குறுநூறு மற்றும் புறநானுறு, அண்ணாமலை நகர், இரண்டாம் பதிப்பு, 1978.

[3.] காந்தி, கா, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

[4.] தாட்சிணாமூர்த்தி, அ, டாக்டர், தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை – 40.

[5.] யுகபாரதி, கவிஞர், இலக்கியமும் இசையும் (இணையம்)